**தமிழ்நாடு பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர்களின்**
**இணைச் செயல்முறைகள், சென்னை6.**

ந.க.எண். 000882/எம்1/இ1/2023, நாள் 26.05.2025

**பொருள்:** பள்ளிக்கல்வி – 2025-26ஆம் கல்வியாண்டில் பள்ளிகள் திறத்தல் – ஆய்வு அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:**
1. அரசாணை (நிலை) எண்.81, பள்ளிக் கல்வி (பக5(1) த் துறை, நாள் 15.03.2024.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.079119/எம்1/இ1/2025, நாள் 11.06.2022.
3. தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், எண்.019428/ஜெ2/2024, நாள் 23.04.2025

******

2025-26ஆம் கல்வியாண்டில் 1 முதல் 12 வகுப்புகளுக்கு ஜூன் 2ஆம் தேதி (02.06.2025) அன்று பள்ளிகள் திறக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. எனவே, மேற்கண்டு நாளில் பள்ளி துவங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பள்ளிகள் திறப்பதற்கு முன்பு மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்த அறிவுரைகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றது, இவ்அறிவுரைகளை பின்பற்றி அனைத்து பள்ளிகளிலும் உரிய செயல்பாடுகள் மேற்கொண்டிட தேவையான நடவடிக்கைகளை உடன் எடுத்திடவும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் (தொடக்கக் கல்வி) தெரிவிக்கப்படுகின்றது.

**இணைப்பு – வழிமுறைகள்**

**தொடக்கக் கல்வி இயக்குநர்** **பள்ளிக் கல்வி இயக்குநர்**

**பெறுநர்**
1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) (மின்னஞ்சல் வழியாக)

**நகல்**
1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை-09.
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை-06.
3. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை-06.

4. உறுப்பினர் செயலர், மாதிரிப் பள்ளிகள், சென்னை–06.
5. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–06.
6. ஆணையர், ஆதிதிராவிடர் நல ஆணையரகம், சென்னை–05.
7. இயக்குநர், பழங்குடியினர் நல இயக்குநரகம், சென்னை–05.
8. இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரகம், சென்னை–05.
9. துணை ஆணையர் (கல்வி), சென்னை மாநகராட்சி அலுவலகம், சென்னை.
10. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை–06
11. இயக்குநர், அரசு தேர்வுகள் இயக்ககம், சென்னை–06

## 2025–26ஆம் கல்வியாண்டில் பள்ளிகள் திறப்பதற்கு முன்பு மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் மற்றும் இக்கல்வியாண்டில் செயல்படுத்த வேண்டிய கல்விச் செயல்பாடுகள் – கல்வி இணைச் செயல்பாடுகள் மற்றும் கல்வி சாராச் செயல்பாடுகள் சார்ந்து பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

2025–26ஆம் கல்வியாண்டில் பள்ளிகள் ஜூன் 2ஆம் தேதி திறக்கப்பட உள்ள நிலையில் பள்ளிகள் திறக்கப்படுவதற்கு முன்பு மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் மற்றும் இக்கல்வியாண்டில் செயல்படுத்தப்பட வேண்டிய கல்விச் செயல்பாடுகள், கல்விசார் செயல்பாடுகள், கல்விசாராச் செயல்பாடுகள் குறித்துப் பின்வரும் அறிவுரைகளைப் பின்பற்றிச் செயல்பட அனைத்துக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பள்ளிகள் திறப்பதற்கு முன் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள்.**

**பள்ளித் தூய்மைப் பணிகள்**

- பள்ளியிலுள்ள அனைத்து வகுப்பறைகள், தலைமை ஆசிரியர் அறை, ஆய்வகம், கழிப்பறைகள் உள்ளிட்ட பிற அறைகள் மற்றும் வளாகம் நன்கு தூய்மைபடுத்தப்பட்டு இருப்பதை உறுதி செய்திடல் வேண்டும்.
- வகுப்பறைகள், தலைமை ஆசிரியர் அறை மற்றும் பிற அறைகளிலுள்ள தளவாடப் பொருட்கள், கதவு மற்றும் ஜன்னல்கள், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் ஆகியவை நன்கு தூய்மைப்படுத்தப்பட்டிருப்பதை உறுதி செய்தல் வேண்டும். காலாவதியான ஆய்வகப் பொருட்களை முறைப்படி பதிவேட்டில் பதிவு செய்து நீக்கம் செய்திட வேண்டும்.
- பள்ளிக் கட்டடத்தின் மேற்பரப்பில் சேர்ந்துள்ள குப்பைகளை அகற்றி மழைநீர் வடிந்து ஓடுவதற்கான பாதை சரியாக உள்ளதா என்பதையும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு முறையாகச் சீர் செய்யப்பட்டுப் பயன்பாட்டில் இருப்பதையும் உறுதி செய்திடல் வேண்டும்.
- மாணவர் பயன்பாட்டிற்கான குடிநீர்த் தொட்டி மற்றும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அனைத்தையும் உட்புறம் கிருமி நாசினி கொண்டு நன்கு சுத்தம் செய்து, தூய்மையாகவும் பாதுகாப்பான குடிநீர் மாணவர்களுக்குக் கிடைக்கும் வகையில் உள்ளதை உறுதி செய்திட வேண்டும்.
- சமையலறை நன்கு சுத்தம் செய்யப்பட்டும் சமையல் பாத்திரங்கள் முறையாகக் கழுவப்பட்டும் பயன்படுத்துவதை உறுதி செய்திடல் வேண்டும்.
- பள்ளி வளாகத்திலோ அல்லது வகுப்பறைகளிலோ தேவையற்ற பயன்பாடற்ற பொருட்கள் இருப்பின் அப்புறப்படுத்துதல் அவசியம். இவைகளை விதிகளின்படி ஏலம் விட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- பள்ளி வளாகத்தினை ஒரு முறை பயன்படுத்தப்படும் நெகிழி இல்லா வளாகமாக (Plastic Free School) மாற்றத்தக்க வகையில் செயல்பாடுகளைத் திட்டமிட்டு செயல்படுத்திட வேண்டும்.
- திறந்தவெளிக் கிணறுகள் இருப்பின் அதன் மேற்பரப்பினை யாரும் அணுகா வண்ணம் மூடிட நடவடிக்கை எடுப்பதுடன் பள்ளி தொடங்குவதற்கு முன்பாகவே இந்நடவடிக்கைகளை நிறைவு செய்யப்பட வேண்டும்.
- கழிவுநீர்த் தொட்டிகள் மூடப்பட்டு பாதுகாப்புடன் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- பள்ளி வளாகம் முழுவதும் குப்பைகளின்றித் தூய்மை செய்யப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்
- பள்ளியில் மாணவர்கள் பயன்படுத்தும் அனைத்து இடங்களும் கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்தல் வேண்டும்
- பள்ளி வளாகத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் பாதுகாப்பாகப் பயில தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டும்.

பள்ளி பாதுகாப்பு முன்னேற்பாடுகள்

- பள்ளி வளாகத்தினுள் மாணவர்களின் முழுமையான பாதுகாப்பிற்குப் பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் அனைத்து ஆசிரியர்களும் முழுப் பொறுப்பு என்பதனை உணர்ந்து செயலாற்றிட வேண்டும்.
- பள்ளித் தலைமையாசிரியர், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து தேவையான பாதுகாப்பு முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.
- பள்ளி வளாகத்தில் பழுதடைந்த கட்டடங்கள் அல்லது உடைந்து விழும் நிலையில் சுற்றுச் சுவர் ஏதேனும் இருப்பின், அத்தகைய கட்டடங்களை மாணவர்கள் அணுகாத வகையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதை உறுதி செய்திடல் வேண்டும்.
- மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பயன்பாட்டில் உள்ள கழிவறைகளின் உள்ளேயும் வெளியேயும் கைகளை சுத்தம் செய்வதற்கு ஏற்றவகையில் போதுமான அளவில் சோப்பு / சோப்புக் கரைசல் வைக்கப்பட்டுப் பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்திட வேண்டும்.
- பள்ளியில் உள்ள அனைத்து மின் சாதனங்கள் மற்றும் மின் சுவிட்சுகள் நன்முறையில் செயல்படுகின்றதா என்பதை தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் மூலம் உறுதி செய்திடல் வேண்டும்.
- பள்ளி வளாகத்தினுள் அமைந்துள்ள மரங்களில் ஒடிந்த கிளைகள் மற்றும் கட்டடங்களுக்கு இடையூறாக அமைந்துள்ள கிளைகளை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்வதுடன் மரங்கள் எளிதில் விழாத வண்ணம் உள்ளதை உறுதிப்படுத்திட வேண்டும்.

மாணவர் சேர்க்கை

- அரசாணை (நிலை) எண்.81, பள்ளிக் கல்வித் (பக5(1)) துறை, நாள்.15.03.2024, இன்படியும் மாணவர் சேர்க்கை மார்ச் 1 ஆம் தேதி முதல் நடைபெற வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வழிகாட்டுதல்களைத் தவறாமல் பின்பற்றிடவும், தேவையான நடவடிக்கையை பள்ளித் தலைமையாசிரியர் மேற்கொள்ள வேண்டும்.
- மாணவர் சேர்க்கைக் கொண்டாட்டம் அனைத்துப் பள்ளிகளிலும் பள்ளி திறந்த முதல் நாள் அன்றே நடத்தப்படவேண்டும்.
- குறிப்பாக தொடக்கப் பள்ளிகளில் முதல் வகுப்பு சேர்க்கை முழுமையாக உள்ளதை உறுதி செய்திட ஆசிரியர்கள் முழுமுயற்சி மேற்கொள்ள வேண்டும்.
- பள்ளி அமைந்துள்ள பகுதிகளில் பள்ளி செல்லும் வயதுடைய அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பதை உறுதி செய்திடல் அவசியம்.
- 8 ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் அனைவரும் 9ஆம் வகுப்பு சேர்வதை உறுதி செய்திட வேண்டும்.
- அரசாணை (நிலை) எண் 113 பள்ளிக் கல்வித் (பக5(1) துறை நாள் 15.05.2025 இன்படி பள்ளியின் சிறந்த செயல்பாடுகளைப் பள்ளிக்கு அருகில் உள்ள குடியிருப்புகளில் வசிக்கும் பெற்றோர்களுக்கும் பொதுமக்களுக்கும் விளம்பரங்கள் மற்றும் கலைநிகழ்ச்சிகளின் மூலம் அரசுப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசின் பல்வேறு நலத்திட்டங்களைப் பற்றி விளக்கி, கடந்த ஆண்டை விட குறைந்தபட்சம் 50 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்க்கும் அரசுப் பள்ளிகளுக்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும் என மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- எனவே அரசால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அரசாணையின்படியும் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி இம்மாணவர் சேர்க்கையில் சிறப்பு கவனம் செலுத்தி அரசுப் பள்ளிகளில் தரமான இலவசக் கல்வி வழங்கப்படுவதைப் பொது மக்கள் அனைவரும் அறியும் வண்ணம் பேனர்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் மாணவர்களின் பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்தி மாணவர்கள் சேர்க்கையை அதிகரிக்கச் செய்ய வேண்டும். மாணவர் சேர்க்கைக்கான சிறப்பு முகாம்களையும் பள்ளி வாரியாக நடத்திடவும் நடவடிக்கை எடுத்திட அறிவுறுத்தப்படுகிறது.
- மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்களை (PRO) அணுகி அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறித்துச் செய்தித்தாள்களில் செய்திகள் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்க வேண்டிய நலத்திட்டங்கள்**

- அரசு/ அரசு நிதியுதவி பெறும் உயர்/மேல் நிலைப் பள்ளிகள் மற்றும் பகுதி நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான 2025-26ஆம் கல்வியாண்டிற்குரிய நலத்திட்டங்கள் வழங்குதல் சார்ந்து ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றி வழங்கப்பட வேண்டும்.
- ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மூலம் காலை உணவு குறித்த நேரத்திற்கு வழங்கப்படுவதைத் தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

**நன்னெறி வகுப்பு**

தமிழகம் உலகிற்கு தந்த பெருங்கொடையாகவும் உலக மக்கள் அனைவருக்கும் பொதுமறையாகவும் உள்ள திருக்குறள் 6 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள தமிழ்பாடநூலில் இன்றியமையாத இடத்தினைப் பெற்று செவ்வனே கற்பிக்கப்படுகிறது. அரசாணை (நிலை) எண் 51 பள்ளிக் கல்வித் (ERT) துறை நாள் 21.03.2017 இன்படி திருக்குறளில் உள்ள அறத்துப்பால் மற்றும் பொருட்பாவில் உள்ள 105 அதிகாரங்களை உள்ளடக்கி 6 வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு நன்னெறிக் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. வாரம் ஒரு நன்னெறி வகுப்பு அனைத்து வகுப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பாட வேளைகளில் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள திருக்குறளினைப் பொருளுடன் ஆசிரியர்கள் கற்பித்தல் வேண்டும். திருக்குறளின் கருத்துக்கள் மாணவர்களின் உள்ளங்களில் ஆழமாக ஊன்றிடவும் நடத்தையில் வெளிப்படுத்திட தக்க வகையில் கதை, கவிதை, நாடகம், வினாடி வினா உள்ளிட்ட செயல்பாடுகள் மூலம் ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் முறைக்கு வலுவூட்ட வேண்டும்.

திருக்குறள் முற்றோதல் நிகழ்வுக்கு ஆர்வமாக உள்ள மாணவர்களைக் கண்டறிந்து பள்ளி அளவில் பயிற்சிகள் வழங்கித் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசினைப் பெற முயல வேண்டும். ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க் கிழமை அன்று காலை வணக்கக் கூட்டத்தில் திருக்குறள் கருத்துப் பரிமாற்றம் சார்ந்து பேச்சு/ கவிதை / சுவரொட்டி /நாடகம் /பாட்டு / கதைகள் இடம் பெறலாம்.

மேலும், இந்நன்னெறி வகுப்புப் பாட வேளையில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் வாழ்வியல் திறன் சார்ந்து வழங்கப்படும் பயிற்சிகளையும் வழங்கிடலாம்.

**கல்விசார் செயல்பாடுகள் (Co-Curriuclar) மற்றும் கல்விசாராச் செயல்பாடுகள் (Extra Curricular)**

அரசுப் பள்ளிகளின் வளர்ச்சிக்கென கற்றல் கற்பித்தல் முறைகளில் நாட்டிற்கே முன்னோடி திட்டங்களான எண்ணும் எழுத்தும், இல்லம் தேடிக்கல்வி, மாதிரிப்பள்ளிகள் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு உருவாக்கிச்

சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, கல்விசார் செயல்பாடுகள் (Co–Curriuclar) மற்றும் கல்விசாராச் செயல்பாடுகளைச் (Extra Curricular) சிறப்பாகச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ளது.

- பள்ளி அளவில் கல்விசார் மற்றும் கல்விசாராச் செயல்பாடுகளான மன்றச் செயல்பாடுகள், நூல்வாசிப்பு, நுண்கலைகள், விளையாட்டு மற்றும் அறிவியல் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் அரசுப் பள்ளி மாணவர்கள் உலக அளவில் புகழ் பெற்ற இடங்களுக்குக் கல்விச்சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். எனவே, இந்த ஆண்டும் இந்தச் செயல்பாடுகளில் மாணவர்கள் அனைவரும் பங்கேற்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே கல்விசார் செயல்பாடுகளை ஊக்குவிக்க வெவ்வேறு காலக்கட்டங்களில் இலக்கியம், கவின்கலை, சூழலியல், போதை எதிர்ப்பு மன்றம் உள்ளிட்ட மாணவர் மன்றங்கள் தொடங்கப்பட்டு நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. இந்தக்கல்வி ஆண்டிலும் இவை எவ்விதத் தொய்வும் இன்றி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
- மாறிவரும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப அரசுப் பள்ளி மாணவர்களுக்குத் தொழில்நுட்ப அறிவு, கணினியியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு மீதான ஆர்வத்தை ஏற்படுத்த, கணினி நிரல் மன்றங்கள் மற்றும் எந்திரனியலைக் கற்றுக்கொள்ள எந்திரனியல் மன்றங்கள் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இணைய பாதுகாப்பு மற்றும் எத்திக்கல் ஹேக்கிங் தொடர்பான பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.
- அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இயற்கையின் மீதான ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் காய்கறித் தோட்டம் மாணவர்களால் ஏற்படுத்தப்பட வேண்டும். அவற்றில் விளையும் காய்கறிகள், பழங்கள் மற்றும் கீரைகள் பள்ளிகளில் சத்துணவில் பயன்படுத்தப்பட வேண்டும். இத்திட்டம் சுற்றுச்சூழல் மன்றம் மூலமாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.
- அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களை ஒவ்வொரு மாதமும் பள்ளிக்கு அழைத்து மாணவனின் உடல்நலம், கற்றல் அடைவு, இணைச் செயல்பாடுகளான விளையாட்டு, வாசிப்புத் திறன், மன்றச் செயல்பாடுகளில் பங்கேற்பு உள்ளிட்ட பள்ளியின் அனைத்து நிகழ்வுகள் குறித்தும் எடுத்துக் கூறப்பட்டு, கல்வி சார் செயல்பாடுகளில் பெற்றோர்களின் ஒத்துழைப்பை உறுதிசெய்தல் வேண்டும்.
- பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே கல்விசார் செயல்பாடுகள் மற்றும் கல்விசாராச் செயல்பாடுகளை ஊக்குவிக்க அனைத்து அரசு மற்றும் அரசுநிதி உதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்

பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் பயன்பெறத்தக்க வகையில் கீழ்க்காணும் மன்றங்கள் மற்றும் சங்கச் செயல்பாடுகள் போன்றவற்றில் குறைந்தது ஏதேனும் ஒரு செயல்பாட்டில் கலந்துகொள்வதை உறுதி செய்ய வேண்டும்.

இலக்கிய மன்றம், சுற்றுச்சூழல் மன்றம், விநாடி வினா, சாலை மற்றும் பாதுகாப்பு மன்றம், நுகர்வோர் மன்றம், தகவல் தொழில் நுட்ப மன்றம், பேரிடர் மேலாண்மை மன்றம், வாக்காளர் விழிப்புணர் மன்றம், திரைப்பட மன்றம், குழந்தை உரிமைகள் மன்றம், இளஞ்செஞ்சுருள் சங்கம் மற்றும் உடல் நல மன்றம் உள்ளிட்ட மன்ற செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு வாரமும் கலைச் செயல்பாடு (Art and Culture) உள்ளிட்ட கல்வி சாரா செயல்பாடுகளுக்கு என இருபாடவேளைகளும் இலக்கிய மன்ற செயல்பாடுகள் (Club Activities) உள்ளிட்ட கல்விசார் செயல்பாடுகளுக்கென இருபாடவேளைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன, இச்செயல்பாடுகள் பள்ளி வேலை நேரத்தில் அவற்றிற்கென ஒதுக்கப்பட்டுள்ள பாட வேளைகளில் அனைத்து மாணவர்களுக்கும் கொண்டு சேர்க்கக் கீழ்க்காணும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றப்பட வேண்டும்.

**கல்விசார் செயல்பாடுகள் (Co-curricular Activities)**

- மன்றச் செயல்பாடுகளைப் பள்ளிகளில் ஆறு முதல் பத்தாம் வகுப்பு வரை சிறப்பாகச் செயல்படுத்த ஏதுவாக மாதிரி காலஅட்டவணை உருவாக்கப்பட்டுள்ளது.
- இச்செயல்பாடுகள் அனைத்தும் அவற்றிற்கென ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளில் அனைத்து மாணவர்களுக்கும் நடத்தப்படுதல் வேண்டும் ஒவ்வொரு மாணவரும் அவர்தம் விருப்பத்திற்கேற்ப அனைத்துச் செயல்பாடுகளிலும் பங்கேற்க ஊக்கப்படுத்த வேண்டும்.
- அனைத்து ஆசிரியர்களையும் மன்றச் செயல்பாடுகளில் சுழற்சி முறையில் ஈடுபடுத்துதல் வேண்டும் தேவைப்படின் ஒரே மன்றத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் ஒரே ஆசிரியரை ஒன்றுக்கு மேற்பட்ட மன்றங்களுக்கும் பொறுப்பாசிரியர் ஆக்கலாம்.
- இலக்கிய மன்றத்தில் தமிழ் மற்றும் ஆங்கில ஆசிரியர்களையும் வினாடி வினா மன்றத்திற்குக் கணித மற்றும் அறிவியல் ஆசிரியர்களையும் சுற்றுச்சூழல் மன்றத்திற்கு அறிவியல் ஆசிரியர்களையும், தொல்லியல் மன்றத்திற்கு (Heritage club) சமூக அறிவியல் ஆசிரியர்களையும் பொறுப்பாசிரியர்களாக நியமிக்கலாம். எனினும், ஆசிரியர்களைத் தேர்வு செய்யும்போது அவர்தம் ஆர்வம் மற்றும் விருப்பத்திற்கேற்ப நியமிக்கலாம்.
- மன்றச் செயல்பாடுகள் மற்றும் நூலகச் செயல்பாடுகளுக்கென ஆசிரியர்கள் செலவிடும் பாடவேளைகளையும் அவர்தம் பணிச் செயல்பாடுகளையும்

ஆசிரியர்களுக்கான பணிப்பகிர்வுக் கால அட்டவணையையும் செயல்படுத்த வேண்டும்.

- மன்றச் செயல்பாடுகளைப் பொறுத்தவரையில் மாதத்தின் முதல் வாரத்தில் இலக்கிய மன்றமும், இரண்டவாது வாரத்தில் வினாடி வினா மன்றமும் மூன்றாவது வாரத்தில் வானவில் மன்றச் செயல்பாடுகளையும் எடுத்துக் கொண்டு மீதமுள்ள ஒரு / இரு வாரத்திற்கு அவர்களின் விருப்பத்திற்கேற்ப பிற மன்றங்களில் ஏதேனும் ஒரு மன்றச் செயல்பாட்டுகளைச் செயல்படுத்திடலாம். கூடுதல் மாணவர் எண்ணிக்கை உள்ள பள்ளிகளில் கூடுதல் மன்றங்களின் செயல்பாடுகளுக்காகப் பள்ளி அளவில் திட்டமிட்டு நடத்திடல் வேண்டும்.
- இலக்கிய மன்றத்தின் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) வாயிலாக மாணவர்களைக் கதை, கட்டுரை, கவிதை மற்றும் பட்டிமன்றம் என பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடச் செய்யலாம். பள்ளி அளவில் ஒவ்வொரு மாதமும் சிறந்து விளங்கும் மாணவர்களை ஒன்றிய அளவிலும், ஒன்றிய அளவில் வெற்றி பெற்ற மாணவர்களை மாவட்ட அளவிலும் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கச் செய்ய வேண்டும். ஒவ்வொரு மாதமும் மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை மாநில அளவில் நடைபெறும் இலக்கிய முகாம் மற்றும் போட்டிகளில் பங்கேற்பார். இம்முகாமில் தமிழ்நாட்டில் உள்ள தலைசிறந்த எழுத்தாளர்கள் மாணவர்களைச் சந்தித்து உரையாடுவர். இலக்கிய மன்றச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் சுமார் 15 மாணவர்கள் வெளிநாடுகளுக்குக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர்.
- ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வாரம் நடைபெறும் வினாடி வினா மன்றத்திற்கு இரண்டு பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. தேவையான பொது அறிவுப் புதிர்களை மாணவர்களே தயாரித்து வர உற்சாகப்படுத்தலாம். பள்ளிக் கல்வித் துறையால் வெளியிடப்படும் புது ஊஞ்சல் மற்றும் தேன்சிட்டு போன்ற சிறார் இதழ்களிலிருந்தும், நூலகப்பாட வேளைகளில் மாணவர் வீட்டுக்கு எடுத்துச் சென்று படிக்கும் நூல்களில் இருந்தும் பொது அறிவு சார்ந்த வினாக்களைக் கேட்க மாணவர்களை ஊக்கப்படுத்தலாம். பள்ளி அளவில் நடத்தப்படும் வினாடி வினா போட்டிகளில் ஒவ்வொரு மாதமும் சிறந்து விளங்கும் மாணவர்களை ஒன்றிய அளவிலும், ஒன்றிய அளவில் வெற்றிபெற்ற மாணவர்களை மாவட்ட அளவிலும் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கச் செய்ய வேண்டும். ஒவ்வொரு மாதமும் மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பர். மாநில அளவில் வெற்றி பெறும் சுமார் 20 மாணவர்கள் வெளிநாடுகளுக்குக் கல்விச்சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர்.

- ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வாரத்தில் வானவில் மன்றத்தின் மூலம் அறிவியல் மற்றும் கணிதச் செயல்பாடுகள் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட வேண்டும்.
- ஒவ்வொரு மாதமும் நான்காவது / ஐந்தாவது வாரத்தில் பள்ளியின் விருப்பத்திற்கேற்ப மன்றங்களில் ஏதேனும் ஒரு அல்லது பிற மன்ற செயல்பாட்டினைத் தெரிவு செய்து நடத்திக் கொள்ளலாம்.

கல்விசாராச் செயல்பாடுகள் (Extra Curricular Activities)

- கலையும் கலைவண்ணமும், கலையரங்கம், சிறார் திரைப்படம், கணினி நிரல், சுற்றுச்சூழல் மன்றச் செயல்பாடுகளைப் பள்ளிகளில் சிறப்பாகச் செயல்படுத்த, பள்ளிகள் தங்கள் தேவை மற்றும் சூழ்நிலைக் கேற்ப இச்செயல்பாடுகளைத் திட்டமிடலாம்.
- இச்செயல்பாடுகள் அனைத்தும் அவற்றிக்கென ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளில் அனைத்து மாணவர்களுக்கும் நடத்தப்படுதல் வேண்டும். ஒவ்வொரு மாணவரும் அவர்தம் விருப்பத்திற்கு ஏற்ப அனைத்து செயல்பாடுகளிலும் பங்கேற்க ஊக்கப்படுத்த வேண்டும்.
- அனைத்து ஆசிரியர்களையும் ஒவ்வொரு கலைச் செயல்பாட்டிற்கும் சுழற்சி முறையில் ஈடுபடுத்துதல் வேண்டும். தேவைப்படின் ஒரே செயல்பாட்டிற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களையும் ஒரே ஆசிரியரை ஒன்றுக்கு மேற்பட்ட செயல்பாடுகளுக்கும் பொறுப்பாசிரியராக்கலாம். எனினும் ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் போது அவர்தம் ஆர்வம் மற்றும் விருப்பத்திற்கு முன்னுரிமை அளித்து நியமிக்கலாம். இச்செயல்பாடுகளுக்கென ஆசிரியர்கள் செலவிடும் பாடவேளையும் அவர்தம் பணி நேரமாகக் கொண்டு ஆசிரியர்களுக்கான பணிப்பகிர்வுக் கால அட்டவணையை உருவாக்க வேண்டும்.
- கலைச் செயல்பாடுகளைப் பொறுத்த வரையில் மாதத்தின் முதல் வாரத்தில் ஓவியம்–ஓரிகாமி/கைவினை செயல்பாடுகளும், இரண்டாவது வாரத்தில் சிறார் திரைப்படமும், மூன்றாவது வாரத்தில் நாடகம்/ கூத்துக்கலை / இசை / வாய்ப்பாட்டு / நடனம் / பாரம்பரியக் கலை சார்ந்து செயல்பாடுகளும், நான்காவது வாரத்தில் கணினி நிரல் மற்றும் சுற்றுச் சூழல் செயல்பாடுகளும் பள்ளியின் விருப்பத்திற்கு ஏற்ப தெரிவு செய்து நடத்திக் கொள்ளலாம். ஐந்தாவதுவாரம் செயல்பாடுகள் வரும் நிலை ஏற்படின் பள்ளிகள் தங்கள் விருப்பத்திற்கேற்ப மேற்கூறிய செயல்பாடுகளில் ஏதேனும் ஒன்றினைத் தங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்துநடத்திக் கொள்ளலாம்.
- ஓவிய/கைவினை ஆசிரியர்கள் உள்ள பள்ளிகளில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களும், இவ்வாசிரியர்கள் இல்லாத பள்ளிகளில் சம்பந்தப்பட்ட வகுப்பு ஆசிரியரும் ஓவியம், ஒரிகாமி மற்றும் கைவினைக் கலைகள் தொடர்பான பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்க வேண்டும். ஆசிரியர்கள் இப்பொருள்

குறித்த நுணுக்கங்களை youtube போன்ற தளத்திலோ, கல்வி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளின் வாயிலாகவோ பெற்று மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். அனைத்து மாணவர்களின் படைப்புகளையும் கம்பிப்பந்தல் வாயிலாகவோ வேறு முறைகளிலோ ஆவணப்படுத்த வேண்டும். சிறந்த படைப்புகளைத் துறையால் வெளியிடப்படும் சிறார் இதழில் இடம்பெறச் செய்ய, ஆசிரியர், தேன்சிட்டு 8வது தளம் ஈ.வெ.கி சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், நுங்கம்பாக்கம், சென்னை –6 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் தேன்சிட்டு இதழில் வெளிவரும்.

- மாதத்தின் ஒவ்வொரு இரண்டாவது வாரமும் ஒவ்வொரு பள்ளியிலும் சிறார் திரைப்படங்கள் திரையிடப்படும். திரைப்படங்கள் மாணவருடைய சிந்தனை மற்றும் செயல்பாடுகளில் ஏற்படுத்தும் தாக்கம் அளப்பரியது. இக்காட்சி ஊடகத்தை மாணவர்களுடைய முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்துவது இம்முயற்சியின் நோக்கமாகும். திரையிடப்பட வேண்டிய படங்கள் அடங்கிய குறுந்தகடுகள் ஒவ்வொரு பருவத்தின் தொடக்கத்திலும், பள்ளிகளுக்கு வழங்கப்படும். திரைப்படக் காட்டி (Projector) இல்லாத பள்ளிகள் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் வாயிலாக வாடகைக்குப் பெற்று திரையிட வேண்டும்.
- படம் திரையிடப்படுவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட ஆசிரியர் மாணவர்களிடம் திரைப்படம் குறித்து சிறு உரையாற்ற வேண்டும். திரைப்படம் முடிந்த பிறகு ஏதேனும் ஐந்து மாணவர்களை ஆசிரியர் கண்டறிந்து அனைத்து மாணவர்கள் முன்னிலையிலும் 2–3 நிமிடங்கள் திரைப்படம் குறித்து பேசச் செய்ய வேண்டும். பின்னர் அனைத்து மாணவர்களையும் திரைப்படம் குறித்து இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சொந்த நடையில் எழுதித்தரச் சொல்ல வேண்டும். இது படம் குறித்து விமர்சனமாகவோ, கதாபாத்திரம் பற்றிய திறனாய்வாகவோ படக்கதை சுருக்கமாகவோ, படத்தில் தான் உணர்ந்தவற்றை விவரிப்பதாகவோ இருக்கலாம். அனைத்து மாணவர்களின் படைப்புகளையும் கம்பிப்பந்தல் வாயிலாகவோ வேறுமுறைகளிலும் ஆவணப்படுத்த வேண்டும். சிறந்த படைப்புகளை துறையால் வெளியிடப்படும் சிறார் இதழில் இடம்பெறச் செய்ய அனுப்பிவைக்க வேண்டும்.
- பள்ளி அளவில் ஒவ்வொரு மாதமும் சிறந்து விளங்கும் மாணவர்களை ஒன்றிய அளவிலும், ஒன்றிய அளவில் வெற்றி பெற்ற மாணவர்களை மாவட்ட அளவிலும் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கச் செய்ய வேண்டும். ஒவ்வொரு மாதமும் மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பர். மாநில அளவில் வெற்றி பெறும் சுமார் 15

மாணவர்கள் வெளிநாடுகளுக்குக் கல்விச் சுற்றுலா அழைத்து செல்லப்படுவர்.

- மூன்றாவது வாரத்தில் நாடகம் கூத்துக்கலை இசை/வாய்ப்பாட்டு/நடனம்/ பாரம்பரிய கலை சார்ந்த செயல்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. ஆறு முதல் பத்தாம் வகுப்பு வரை பாடநூல்களில் இடம்பெற்றுள்ள நாடகத்தையே பள்ளி / பொது நூலகத்தில் இருந்து நாடகம் தொடர்பான நாட்களில் இருந்தோ, தமிழ்ப் பாடநூலிலுள்ள இலக்கியப் பகுதியைத் தேர்ந்தெடுத்தோ நாடகமாக உருவாக்கி மாணவர்களை நடிக்க ஊக்கப்படுத்தலாம். பள்ளிக்கு அருகாமையில் உள்ள நாடகக் கலைஞர்களை பள்ளிக்கு அழைத்து மாணவர்களுக்கு நாடகம் குறித்த நுணுக்கங்களை அறிமுகப்படுத்தலாம். திருவண்ணாமலை, அரியலூர், பெரம்பலூர், வேலூர் போன்ற மாவட்டங்களில் கூத்துக்கலை கிராம அளவில் சிறப்பாக நிகழ்த்தப்பட்டு வருகிறது. அதுபோல பள்ளிக்கு அருகாமையில் நாடகம், கூத்து, தோல்பாவை போன்ற கலைவடிவங்களைப் பின்பற்றும் கலைஞர்கள் இருப்பின், குறித்து பள்ளி மேலாண்மை குழுக்கள் வாயிலாக பள்ளிக்கு அழைத்து மாணவர்களுக்கு பயிற்றுவிக்கலாம். மாணவர்களுடைய கலை ஆர்வத்தை ஊக்குவிப்பது, கற்பனை திறனை மேம்படுத்துவது, பாரம்பரிய கலைகளைப் பள்ளியளவில் கொண்டு சேர்ப்பது ஆகியவை இச்செயல்பாடுகளின் முக்கிய நோக்கமாகும். பள்ளிகள் மாணவர்களின் விருப்பத்திற்கிணங்க இசை, வாய்ப்பாட்டு, நடனம், பாரம்பரிய கலைகளான கரகாட்டம், ஒயிலாட்டம், வில்லுப்பாட்டு, கும்மி, கோலாட்டம் பொம்மலாட்டம், கிராமியப் பாடல் போன்றவற்றில் இவற்றில் கூறப்படாத அந்தந்த பகுதிகளில் இருக்கும் கலைகளையும் சேர்த்துப் பயிற்சி அளிக்கலாம். இதுகுறித்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் தனியே வழங்கப்படும். இச்செயல்பாடுகளை மாதவாரியாக ஆவணப்படுத்துதல் அவசியமாகும்.
- அரசு இசைப்பள்ளி, கல்லூரி, ஜவஹர் சிறுவர் மன்றம் போன்ற அரசு அமைப்புகளிடமிருந்தும் தனியார் கலைக் கல்வி நிறுவனங்களிடமிருந்தும் உரிய விதிமுறைகளைப் பின்பற்றி கலைஞர்களை அழைத்து வெவ்வேறு கலை வடிவங்களை மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கலாம்.
- அரசாணை 163, நாள்.10.07.2017 இன்படி கலைத் திருவிழா நடத்துவது தொடர்பாக விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் அளிக்கப்பட்டுள்ளன. பள்ளி அளவில் ஒவ்வொரு மாதமும் சிறந்து விளங்கும் மாணவர்களை, ஒன்றிய அளவில் வெற்றிபெற்ற மாணவர்களை, மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கச் செய்ய வேண்டும். ஒவ்வொரு மாதமும் மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் ஆண்டுக்கொருமுறை மாநில அளவில் நடைபெறும் கலைத் திருவிழாவில் பங்கேற்பர். மாநில அளவில் வெற்றி பெறும் சுமார் 20 மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர்.

- நான்காவது வாரத்தில் கணினி நிரல் மற்றும் சுற்றுச் சூழல் மன்றம் சார்ந்த செயல்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. இணையப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இணைய வழிக் குற்றங்களிலிருந்து மாணவர்களைத் தற்காத்துக் கொள்ளவும், தேவையான பயிற்சிகளை கணினி நிரல் மன்றங்களையும் மாணவர்களின் படைப்பாற்றலை வெளிக் கொணர எதிர்காலத் தொழில் நுட்பங்களுள் ஒன்றான எந்திரவியல் மன்றங்களையும் கணினி அறிவியல் ஆசிரியர் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளில் துவங்க வேண்டும்.
- கணினி நிரல் மன்றங்கள் மற்றும் எந்திரனியல் மன்றங்களின் பொறுப்பாசிரியர்களுக்கு மாவட்ட அளவில் உரிய பயிற்சிகள் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு அளிக்கப்படும். பள்ளியளவில் ஒவ்வொரு மாதமும் கணினி நிரல் எந்திரனியல் மன்றச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் மாணவர்கள் ஒன்றிய அளவிலும், ஒன்றிய அளவில் வெற்றி பெற்ற மாணவர்களை மாவட்ட அளவிலும், நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கச் செய்ய வேண்டும். ஒவ்வொரு மாதமும் மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் ஆண்டுக்கு ஒருமுறை மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பார். மாநில அளவில் நடைபெறும் பள்ளி புத்தாக்கத் திட்டப் போட்டிகளில் (School Innovation Development Project) வெற்றி பெறும் மாணவர்களுக்கு இளம் கண்டுபிடிப்பாளர் விருது (Young Innovator) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும்.
- அனைத்து பள்ளிகளிலும் சுற்றுச் சூழல் மன்றத்தின் மூலம் மரக் கன்றுகள் நடுதல், காய்கறித் தோட்டம் அமைத்தல், திடப் பொருள் கழிவு மேலாண்மை மற்றும் கழிவுப் பொருட்களை குறைத்தல், தரம் பிரித்தல் மற்றும் மறுசுழற்சி செய்தல், ஆற்றல் சேமித்தல், நீர் சேமித்தல், ஒரு முறை பயன்படுத்தும் நெகிழி இல்லா பள்ளி என்ற நிலையை உருவாக்கத்தக்க வகையில் செயல்பாடுகளைத் திட்டமிட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

மேற்கூறிய கல்விசாராச் செயல்பாடுகள் தவிர, இளஞ்செஞ்சிலுவை சங்கம், தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணி திட்டம், சாரண சாரணியர், செஞ்சுருள் மன்றம் மற்றும் பள்ளி உடல் நல மன்றம் போன்றவற்றிற்கான செயல்பாடுகளை பள்ளி வேலை நாட்களில் காலை/மாலை நேரங்களில் திட்டமிட்டு செயல்படுத்தலாம்.

**பள்ளிக் கால அட்டவணை மற்றும் பள்ளி நாட்காட்டி**

2025–26ஆம் கல்வியாண்டிற்கான நாட்காட்டியில் பள்ளி தொடங்கும் நாள், தேர்வுகள் நடைபெறும் நாள், ஆசிரியர்களுக்கான பயிற்சி நாட்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி, தலைமை ஆசிரியர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி, மன்றச் செயல் பாட்டிற்கான பயிற்சி, எண்ணும் எழுத்தும் சார்ந்த பயிற்சி, உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்பிற்கான பயிற்சி, தகவல் தொடர்பு

தொழில் நுட்ப பயிற்சி, பருவத் தேர்வு அட்டவணை போன்ற தரவுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அரசு / அரசு உதவி பெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் நாட்காட்டி அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களை முழுமையாகப் பின்பற்றி, வரும் கல்வியாண்டு சிறப்புற அமைய உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அனைத்துப் பள்ளிகளும் முறையான பணிப் பகிர்வுடன் கூடிய வகுப்பிற்குரிய மற்றும் ஆசிரியர்களுக்குரிய கால அட்டவணையை தயாரித்து பள்ளி திறக்கும் நாள் முதல் செயல்படுத்த வேண்டும். (மாதிரி கால அட்டவணை மற்றும் பள்ளி நாட்காட்டி பின்னர் அனுப்பப்படும்)

**பள்ளிகளில் கீழ்க்காணும் நடைமுறைகளையும் பின்பற்றுமாறு தலைமையாசிரியர்கள் / அனைத்து வகை ஆசிரியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

- உடற்கல்வி ஆசிரியர்கள் பள்ளி வேலை நேரத்திற்கு 30 நிமிடத்திற்கு முன்பாகவே வருகை புரிதல் வேண்டும். உடற்கல்வி ஆசிரியர்கள் மாணவர்களின் வருகை, ஒழுக்கம், சீருடை ஆகியவற்றை நெறிப்படுத்திட வேண்டும். ஒவ்வொரு வகுப்பிற்கும் வாரத்திற்கு இரண்டு பாடவேளைகள் உடற்கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. உடற்கல்வி ஆசிரியர்கள் குறிப்பிட்ட வகுப்பு மாணவர்கள் அனைவரையும் இப்பாடவேளைகளில் விளையாட வைக்க வேண்டும். வாரத்தில் ஒருநாளில் பள்ளி நேரம் முடிந்தவுடன் அனைத்து மாணவர்களுக்கும் கூட்டு உடற்பயிற்சி ஏற்பாடு செய்ய வேண்டும். மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ள பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை, 9ஆம் வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்பு, 11ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்குத் தனித்தனியே கூட்டு உடற்பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும்.
- தலைமை ஆசிரியர், உதவித் தலைமையாசிரியர் முன்னிலையில் காலை வணக்கக் கூட்டம் நடைபெறுதல் வேண்டும். காலை வணக்கக் கூட்டத்தில் மாணவர்களைத் தவறாமல் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க் கிழமை அன்று காலை வணக்கக் கூட்டத்தில் 6 முதல் 12 வகுப்பு உள்ள பள்ளிகளில் போதை எதிர்ப்பு சார்ந்த தகவல்கள்/கருத்து பரிமாற்றம் சார்ந்து பேச்சு/கவிதை/ சுவரொட்டி/ நாடகம்/ பாட்டு/ திருக்குறள் கதைகள் இடம்பெறலாம்.
- "முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்" அனைத்துக் குழந்தைகளுக்கும் குறித்த நேரத்திலும் தரமானதாகவும் வழங்குவதை உறுதி செய்தல் வேண்டும்.

- மதிய உணவு இடைவேளை முடிந்த பின்பு 20 நிமிடம் ஐந்தாம் பாடவேளை ஆசிரியர்கள் வாயிலாக மாணவர்கள் சிறார் பருவ இதழ், செய்தித்தாள், பள்ளி நூலகத்தில் உள்ள நூல்கள் போன்றவற்றை வாசிக்கச் செய்ய வேண்டும்.
- நன்னெறி வகுப்பு வாரத்திற்கு ஒரு பாடவேளை என ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பாட வேளைக்கு சம்பந்தப்பட்ட வகுப்பு ஆசிரியர் பொறுப்பேற்று மாணவர்களின் மனநலன் சார்ந்து தகுந்த ஆலோசனை வழங்கவேண்டும்.
- வாரத்திற்கு ஓர் பாடவேளை நூலகச் செயல்பாடுகளுக்கான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பாடவேளையின்போது பள்ளியில் உள்ள நூலகப் புத்தகங்களை மாணவர்களுக்குப் பிரித்து வழங்கி அவர்கள் படித்து தெளிந்தவற்றை சார்ந்த குறிப்புகளை பாட குறிப்பேடுகளில் எழுத செய்யலாம். ஒருங்கிணைந்த பள்ளி கல்வி மூலம் வழங்கப்பட்டிருக்கும் புத்தகங்களை இப்பாடவேளையில் மாணவர்கள் படித்தலுக்கும் ஆசிரியர்களால் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.
- பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் நடத்திட தெரிவிக்கப்படும் நாட்கள் மற்றும் தேவையான நாட்களில் உரிய அறிவுரைகளைப் பின்பற்றி நடத்திட வேண்டும். அதே நாளில் பள்ளி மேலாண்மை குழு கூட்டத்திற்கு முன்பு அந்தந்த வகுப்புகளில் பெற்றோர் கூட்டம் நடத்தப் பெற வேண்டும். இக்கூட்டத்தில் ஆசிரியர், பெற்றோரிடம் அவர்தம் குழந்தைகளின் வருகை, கற்றல் நிலை, உடல் நலம், மனநலம், கல்வி இணை செயல்பாடுகள், கல்விசாரா செயல்பாடுகள் என பள்ளியின் அனைத்து நடவடிக்கைகளையும் விவாதிப்பதுடன் ஒவ்வொரு நாளும் வீட்டில் மாணவரின் கற்றல் சார்ந்து பெற்றோர் செய்ய வேண்டிய பணிகளையும் எடுத்துக் கூற வேண்டும். மேலும் பள்ளியின் கட்டமைப்பு வசதிகள் குறித்தும் அதனை மேம்படுத்த பள்ளி மேலாண்மைக் குழு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் தகவல் தெரிவிக்க வேண்டும்.

இச்செயல்முறைகளை அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அனுப்பிட தக்க நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இச்செயல்முறைகளைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலை உடன் அனுப்பிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொடக்கக் கல்வி இயக்குநர் பள்ளிக் கல்வி இயக்குநர் 26/05/2025

26.5.25 26.5.25